செ.வெ.எண். 52/ஜூலை தேதி : 28.07.2016

# மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை இறகுபந்து போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர் வீராங்கணைங்களுக்கு கோப்பையை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.



தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை இறகுபந்து போட்டிகள் 2015-16 தருமபுரி மாவட்ட விளையாட்டரங்கில் 27.07.2016 மற்றும் 28.07.2016 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இப்போட்டிகளில் கன்னியாகுமரி, விருதுநகர், திருச்சி, தஞ்சாவூர், சென்னை, காஞ்சிபுரம், கோவை, ஈரோடு ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த ஆண்கள் அணிகளும், சென்னை, காஞ்சிபுரம், கோவை, ஈரோடு, மதுரை, விருதுநகர், திருச்சி மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த பெண்கள் அணிகளும் பங்கேற்றனர்.

மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை இறகுபந்து போட்டிகளில் ஆண்கள் அணியினர் முதல் பரிசு காஞ்சிபுரம் மாவட்டமும், 2ம் பரிசு சென்னை மாவட்டமும், 3ம் பரிசு கோவை மாவட்டமும் பெற்றனர். பெண்கள் அணிகளில் முதல் பரிசு மதுரை மாவட்டமும், 2-ம் பரிசு காஞ்சிபுரம் மாவட்டமும், 3ம் கோவை மாவட்டமும் பெற்றனர். போட்டிகளில் முதலிடம் பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கணைகளுக்கு தலா ரூ. 1 இலட்சமும், 2ம் இடம் பெற்றவர்களுக்கு தலா ரூ. 75 ஆயிரமும், 3ம் இடம் பெற்றவர்களுக்கு தலா ரூ. 50 ஆயிரமும் ஆக மொத்தம் பரிசுத் தொகையாக ரூ. 18 இலட்சத்திற்கான காசோலைகளையும், கோப்பையையும், சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மண்டல முதுநிலை மேலாளர் தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திரு. ப. சிவகுமார், மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு. ந. நஞ்சப்பன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.